# செல்லச் சிட்டுக்கள்

(சிறுவர் பாடல்கள்)

கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லச் சிட்டுக்கள்

(சிறுவர் பாடல்கள்)



**கிண்ணியா சபீனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | செல்லச் சிட்டுக்கள் |
| நூலின் வகை | : | சிறுவர் பாடல் |
| ஆசிரியர் | : | கிண்ணியா சபீனா |
| தொடர்பு | : | இல: 80, அல்ஹிரா வீதி,<br>மாஞ்சோலை, கிண்ணியா.<br>076 6184695<br>baithullasafeena470@gmail.com |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2023. |
| பக்கங்கள் | : | 36 |
| நிறம் | : | முழுவர்ணம் |
| பதிப்பகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்<br>0094 71 700 94 91 |
| ISBN | : | 978-624-94949-6-1 |
| விலை | : | 600.00 ரூபா |


ஆசிரியரின் முன்னைய நூல்

**'வண்ணக் கனவுகள்'**

(கவிதைத் தொகுதி - ஜனவரி, 2023)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எழுத்து இலக்கியப் பரப்பில் சிகரம் தொட்டு நிற்கின்ற கண்ணியமிக்க கிண்ணியா மண்ணின் முற்போக்கு கலை இலக்கிய வாதியாக வலம் வருகின்றார் பன்முக எழுத்தாளர், சித்தி சபீனா வைத்துல்லாஹ்! இவரது இரண்டாவது நூலாக வெளிவருகிறது 'செல்லச் சிட்டுக்கள்' என்ற சிறுவர் பாடல்கள் தொகுதி. பயிற்றப்பட்ட ஆசிரியையான சபீனா வைத்துல்லாஹ் கந்தளாய், பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயம், கிண்ணியா மகளிர் கல்லூரி, அறபா மகா வித்தியாலயம், திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி, சாஹிரா கல்லூரி போன்ற திருகோணமலை மாவட்டத்தின் முன்னணிக் கல்லூரிகளில் நீண்ட காலமாக ஆசிரியப் பணி புரிந்ததன் மூலம் நன்கு பிரபல்யமாகி இலக்கிய உலகெங்கும் பேசப்படக்கூடிய ஒருவராகத் தன்னை இனங்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பன்முக ஆளுமைமிக்க எழுத்தாளரான இவர் தனது படைப்பாக்கங்களுக்காக பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச விருதுகள் பலவற்றைத் தனதாக்கினார்! ஓய்வுநிலை அடைந்தும் ஓயாத அலையாக இலக்கியப் பணியில் முதன்மையும், முன்னிலையும் பெறும் கிண்ணியா சபீனாவிடமிருந்து அவர் வாழ்நாளில் சந்தித்த நிகழ்வுகளில் மனதை தொட்டவை, இரசித்தவை மற்றும் பெண்ணியம், சர்வதேசம் சார்ந்தவை என எழுத்துருக்கள் வெளிவருவதை அவதானிக்க முடிகிறது. இவை ஆளுமிக்க ஒருவரால் மட்டுமே சாத்தியமாகக் கூடும். நாற்பது வருடங்களுக்கு மேலாக கல்விப் பணி புரிந்து மாணவச் செல்வங்களின் மனவோட்டங்கள், கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை மிக நன்றாகத் தெரிந்து வைத்ததன் அறுவடையே இதுவாகும். செல்லச்சிட்டுக்கள் நூலில் மொத்தமாக 28 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை அனைத்தும் முத்தானவை. என்னுயிர் தாய் என்ற இவரது பாடல் நூலின் சிறப்பிற்கு முதல் அணிகலனாக அமைகிறது. தாயைப் பற்றிய இக்கவி மிகவும் சிறப்பானதாகக் காணப்படுகிறது! ஒவ்வொரு பாடலும் சொல்ல வருகின்ற விடயம் மனதைத் தொடுவதாய் அமைந்துள்ளது! எழுத்தாளர் சபீனா. பூ, தேன், இதழ், சிறகு, மலர்கள் மற்றும் பூச்சி என பல்வேறு பெயர்ச் சொற்கள் கவியெங்கும் நிறைந்து கிடந்து, சிறுவர்கள் மனதை கவர்வதாய் அமைந்துள்ளது. இது ஒரு தனித்துவ எழுத்தின் ஆற்றலை வெளிப்படுத்திச் செல்கிறது. நிச்சயமாகச் செல்லச் சிட்டுக்கள் எனும் இந்நூல் சிறுவர் பாடல் களஞ்சியத்தில் இடம் பெறும் எனத் துணிந்து கூறலாம்! இந்நூலின் மூலமாக இவரின் எழுத்துலக இலக்கு இன்னும் விரிவடையும் என்பது திண்ணமாகும்.

எழுத்தாளர் : **பீ ரீ அஸீஸ்**
கிண்ணியா 07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனதிலிருந்து..

*புகழனைத்தும் இறைவனுக்கே!*
*அல்ஹம்துலில்லாஹ்!*

எனது நீண்ட காலக் கனவு நிறைவேறியதில் மகிழ்ச்சியடைகிறேன்! 2001 – 2005ம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரியில், ஆரம்பப் பிரிவுச் செல்வங்களுக்குக் கல்வி புகட்டும் வேளையில் காலைக் கூட்டங்களில் அச் செல்லச்சிட்டுக்கள் பாடலிசைப்பர்! அவர்களோடு இணைந்து நானும் பாடுவேன்! அன்று தோன்றிய எண்ணமே இன்று நிறைவேறியுள்ளது!

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செல்லச்சிட்டுகள் எனும் இருபத்தெட்டுப் பாடல்கள் அடங்கிய இந்நூல் கருவாகி உருவாகி, வண்ணமயமாக உங்களின் கரங்களிற் சிறகு விரித்துள்ளது! அதற்குதவிய ஆண்டவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்நூலாக்கம் பூர்த்தியாகும் வரையில் பலர் ஆலோசனைகள் வழங்கினார்கள்! அந்த வகையில், மொழித்துறை பேராசிரியரான ஜனாப் ஏ.எப்.எம்.அஸ்ரப் அவர்களின் பெறுமதியான ஆலோசனைகள் இந்நூலின் அணிகலன்களாக அமைந்தன. மற்றும், கலாபூசணம் பீ.ரி.அஸீஸ், ஷெல்லிதாசன் ஐயா, எழுத்தாளர் திரு.கதிர்.திருச்செல்வம், என் ஆசான் ஜனாப் ஹாபீஸ் இஸ்ஸதீன் மற்றும் ஆர்.சதாத், தமிழ்நெஞ்சம் அமீன் நானா, ஆகியோர் காத்திரமான ஆலோசனைகள் வழங்கினார்கள்! அத்தோடு, இலக்கிய விமர்சகர் ஆய்வாளர், ஜனாப் ஜெஸ்மி மூஸா அவர்களும் இந்நூலாக்கத்தினை நெறிப்படுத்தினார். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

மேலும் எனது இலக்கியப் பயணத்திற்கு உறுதுணையாக இருக்கும் எனது கணவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மற்றும் அட்டைப் படம் வடிவமைத்த திரு.எஸ்.விஜய் அவர்களுக்கும் சிறந்தமுறையில் நூலுருவாக்கத்தைச் செய்த விஜய் பதிப்பகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! மேலும் உதவிகள் புரிந்த அன்வர்டீன் முஹம்மட் ஆதில் மற்றும் வெளியீடு செய்யும் லக்ஸ்டோ மீடியா ஸ்ரீ லங்கா நிர்வாகி, ஒளிபரப்பாளர் கலாநிதி ஏ.எல். அன்ஸார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது,

அன்புடன்,
**கிண்ணியா சபீனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

செல்லசிட்டுகள் வாழ்கவென
வாழ்த்தைக் கூறி நிறைகின்றேன்
சின்னச் சின்ன மழலைகளின்
சிந்தை மயக்கும் பாட்டுகளைக்
கன்னல் தமிழில் சுவையாகக்
கவிதை வடிவில் தந்துள்ளீர்
இன்னும் இன்னும் வேண்டுமென
இதனைக் கேட்டே தினமுறங்கும்
எண்ணம் மகிழும் பிஞ்சுகளோ
இனிப்பைக் கூட மனம்மறக்கும்
படிக்கப் படிக்க நானிங்கே
பனிபோல் கரைந்து மகிழ்கின்றேன்
அடியின் பொருளை அகமெண்ணி
அடடா மழலை ஆகின்றேன்
மடியில் தவழும் மழலையென
மனத்தால் அகவைக் குறைகின்றேன்
வடித்த கவிகள் வாழ்கவென
வாழ்த்தைக் கூறி நிறைகின்றேன்.

**தமிழ்நெஞ்சம் அமீன்,**
பிரான்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உள்ளடக்கம்


| | |
|---|---|
| என்னுயிர்த் தாய் | 07 |
| பலூன்காரர் | 08 |
| பட்டாம்பூச்சி சிறகடிக்குது | 09 |
| பூனைக்குட்டி | 10 |
| வர்ணங்கள் | 11 |
| வெள்ளை முயல் | 12 |
| பயமில்லாமற் புறப்படுவோமே! | 13 |
| குரங்கு மாமா | 14 |
| புள்ளிமானே! | 15 |
| புத்தாண்டு | 16 |
| எந்தன் அப்பா! | 17 |
| வானவில் | 18 |
| வான்துளி | 19 |
| செல்லச் சிட்டுக்கள் | 20 |
| சீர்கல்வி பெற்றிடுவோம்! | 21 |
| நாய்க்குட்டி | 22 |
| தொற்றா நோய்கள் தாக்குது! | 23 |
| கப்பல் | 24 |
| பட்டம் பறக்குது! | 25 |
| கிராமிய வாழ்க்கை | 26 |
| மாட்டு வண்டி | 27 |
| தூக்கணாங்குருவி | 28 |
| குள்ள நரி | 29 |
| மரம் நடுவோம் | 32 |
| தங்க பொம்மை | 33 |
| செந்தமிழைச் சுவைப்போம்! | 34 |
| நோயில்லாமல் வாழுவோம்! | 35 |
| கதிரவன் வரவு | 36 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிர்த் தாய்



கருவினில் என்னைச் சுமந்தவளே!
கருணையைத் தினமும் சொரிபவளே!
குருதியைப் பாலாய்த் தந்தவளே!
அருகினில் நீயும் வேண்டுமம்மா!

வலிகளைத் தாங்கும் நிலமகளே!
கலங்கரை விளக்காய்த் திகழ்பவளே!
வல்லமை வளர்க்கச் செய்தவளே!
சொல்லினில் அன்பைப் பொழிபவளே!

இன்னுயிர் தந்த தேவதையே!
என்னுயிர் அன்புத் தாயவளே!
தைரியம் ஊட்டி வளர்த்தவளே!
உயிராய் உன்னைக் காப்பேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலூன்காரர்



பலூன்காரர் வருகிறார்
அழகு பலூன் விற்கிறார்
பலரும் அதனை வாங்கியே
ஊதிப் பார்த்துச் சிரிக்கிறார்

வண்ண வண்ண பலூன்களாம்
வடிவம் காட்டும் பலூன்களாம்
பாலர் விரும்பும் பலூன்களாம்
பார்க்க அழகு பலூன்களாம்

அழகு பலூன்கள் பாரம்மா
எனக்கும் வாங்கித் தாங்கம்மா
தம்பிக்கும் பலூன் கொடுப்போமா?
ஊதிப் பார்த்து மகிழ்வோமே!

கல்யாண வீட்டில் கலக்குது
சிறுவர் கையில் சிரிக்குது
காற்றில் விட்டால் பறக்குது
கணத்தில் வெடித்துச் சிதறுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாம்பூச்சி சிறகடிக்குது



பாலர்களே வாருங்கள்
பல வர்ணம் பாருங்கள்
பவளமல்லி இதழ் விரிக்க
பட்டாம்பூச்சி சிறகடிக்குது

பூக்களைத் தேடித் தேடித்
தேன் குடித்துத் திரியுது
விதவிதமாய் ஓவியங்கள்
அதன் சிறகினில் தெரியுது



அழகு மலர்கள் அதன் வரவில்
ஆனந்தமும் அடையுது
தங்கையதைப் பிடித்திடவே
ஆசையோடு ஓடுது!

அம்மா வந்து பாருங்கள்
அதைப் பிடித்துத் தாருங்கள்
சும்மா நான் சொல்லவில்லை
அன்பாயதை வளர்ப்போமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்குட்டி



சின்னச் சின்னப் பூனைக்குட்டி!
என்னைச் சுற்றும் காலில் முட்டி!
பண்ணும் குறும்பு சிரிப்பு மூட்டி!
கண்கள் இருட்டில் தங்கக் கட்டி!

பாலைக் கண்டால் பதறும் சுற்றி!
பஞ்சுக் காலால் நடக்கும் எட்டி!
பந்தை அடிக்கும் செல்லக் குட்டி!
பல்லியைக் கடிக்கும் பையத் தட்டி!

வழியில் பதுங்கி இரையைத் தேடி!
எலியைத் தாவிப் பிடிக்கும் பற்றி!
பாம்பைப் பார்த்தால் சீறிக் காட்டி!
பாதுகாக்கும் நம்மை அழகுக் குட்டி!





கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணங்கள்





கண்ணைக் கவரும் வர்ணங்கள்,
எண்ணம் மகிழச் செய்யுதே!
சின்னஞ் சிறுவர் சித்திரம்,
வர்ணம் பூசி வரைவோமே!
(கண்ணைக் கவரும்...)

வானும் கடலும் நீல நிறம்!
வாழைப் பழங்கள் மஞ்சள் நிறம்!
ஆவின் பாலும் வெள்ளை நிறம்!
நம் பல்லின் நிறமும் பால் நிறமே!
(கண்ணைக் கவரும்...)

காணும் பயிர்கள் பச்சை நிறம்!
கரையும் காகம் கறுப்பு நிறம்!
மனிதக் குருதி சிவப்பு நிறம்!
வானவில்லோ காட்டும் ஏழு நிறம்!
(கண்ணைக் கவரும்...)

பலவர்ணப் பூக்கள்
பார்வைக் கழகாய்த் தெரியுதே!
பாதை கடக்க மூன்று நிறம்!
பயண ஒழுங்கைச் சொல்லுதே!
(கண்ணைக் கவரும்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளை முயல்

வெள்ளை முயல் காட்டுக்குள்ள,
துள்ளித் துள்ளி ஓடுது!
கல்லும் முள்ளும் குத்தினாலும்
சும்மா விரைந்து பாயுது!

மெல்ல மெல்லப் புதருக்குள்ள
பதுங்கிக் கொண்டு பார்க்குது!
அள்ளி யணைக்கப் பிள்ளைகள்,
ஆசையோடு தேடி ஓடுது!

பஞ்சுமேனி பார்த்த மனசும்
கொஞ்சச் சொல்லிக் கெஞ்சுது!
அஞ்சிடாமல் அழகு முயலே!
என்னிடம் நீ வந்திடு!!

உண்ண உணவு நான் தருவேன்!
உலவ இடமும் தருவேனே!
மெல்ல மெல்லப் பாய்ந்து,
விளையா டிடுவோம் நாமே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமில்லாமற் புறப்படுவோமே

ஏலேலோ ஐலசா!
ஏலேலோ ஐலசா!

கட்டு மரம் இங்கிருக்கு!
கடல் நிறைய மீனிருக்கு!
மனந்தனிலே பலமிருக்கு!
பயமில்லாமற் புறப்படுவோமே!!
இறையை நம்பி நம்ம
போய் வருவோமே!
ஏலேலோ...

ஆழ்கடலில் மீன்பிடித்தே
வாழுமெங்கள் பசி தீர,
வானிலவின் ஒளியினிலே
ஆடுகின்றோம் அலைமேலே!
ஏலேலோ...

வாளை பாரை சூரையென,
கடலில் மீன்கள் இருக்குது!
பெருங்கடலின் நடுவினிலே,
கடுங் குளிரும் நடுக்குது!

வலையில் மீன்கள் நிறைந்ததுமே,
மனமும் துள்ளிக் குதிக்குது!
ஏலேலோ...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு மாமா

குரங்கு மாமா மரங்களிலே தாவிப் பாய்கிறார்!
கரங்களாலே காய்கனிகள் பறித்துச் சுவைக்கிறார்!
பறித்த கனிகள் பாதிக்கு மேல் கடித்து வீசுறார்!
குதித்துக் குதித்து ஊஞ்சலாடிக் கூத்தடிக்கிறார்!

நாட்டுப்பக்கம் சனங்களுக்குத் தொல்லை செய்கிறார்!
கவணெடுத்து வீச முன்னர் காததூரம் பாய்கிறார்!
காட்டுப்பக்கம் போயிடுங்கள் எங்கள் அழகு மாமா!
குறும்புக்கார மாமாவின் குட்டிகளும் அழகுதாம்மா!







கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளி மானே!



துள்ளி வரும் புள்ளி மானை அம்மா வந்து பாருங்கோ!
அதன் புள்ளிகளை அள்ளித் தரச் சொல்லிக் கேளுங்கோ!

ஆளைக் கண்டால் அழகுமான்கள் ஓடி மறையுதே!
மானேயுனைக் காணும் போது நெஞ்சம் நிறையுதே!

ஆனந்தமாயக் கொஞ்சிடவே ஆசை பொங்குதே!
கானகத்தில் சிங்கம் வரும் அங்கே போகாதே!

கன்னிமானே கண்படுமே உன்னழகைக் கண்டாலே!
பெண்ணின் சாயலுன் கண்களிலே தெரியுதே!

என்னைப் போல வீட்டில் வாழ நீயும் வாராயோ!
நல்ல பதில் எந்தனுக்குச் சொல்லி டுவாயே!

பச்சைப் புல்லும் பால்பழமும் நானுனக்குத் தந்து,
மெத்தையிலே தூங்க வைப்பேன் வந்திடுவாய் மானே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு



புன்னகை பொங்கிடப் புத்தாண்டு வந்தது!
புதுமை தந்திடும் பெருமை கொண்டது!
மண்ணோரும் மகிழ இந்நாளும் வந்தது!
சின்னவர் கொண்டாடச் சிறப்பும் தந்தது!

கன்னலும் செந்நெல்லும் இந்நாளில் முற்றிட,
உழவர் மகிழும் கனவும் வென்றது!
நாமெலாம் சேர்ந்ததும் நலங்கள் பொங்குது!
ஊரெலாம் குயில்கள் கூவி மகிழுது!

பட்டாசு சுட்டிட வாண்டுகள் சேருது!
சுட்டிட்ட பட்சணம் பாலகர் உண்ணுது!
தட்டு நிறைந்த பூக்களைக் கொண்டு,
சுட்டிப் பெண்களும் கோயிலை நாடுது!
(புன்னகை பொங்கிட)



கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் அப்பா!



அல்லும் பகலும் உழைக்கும்
எங்கள் அன்பு அப்பா!
வெல்லும் வழிகள் என்றும்,
எமக்குச் சொல்லி டுவாரே!

எண்ணும் எழுத்தும் ஊட்டக்,
கண்ணும் கருத்தும் காட்டுவார்!
என்னைத் தூக்கித் தோளில்,
சுமந்து கொண்டு செல்லுவார்!

கை பிடித்து ஊரெலாம்
நடக்க வைத்தவர்!
மெய் வருந்த உழைத்திடும்
மேன்மையான சேவகர்!

விந்தையான சிந்தனைகள்,
எந்தனுக்குத் தந்திடுவாரே!
சொந்தமென வந்தவரைச்
சேர்த்த ணைப்பாரே!

மந்திரமாய் இருக்கும்
எந்தை வார்த்தையே!
சபையினிலே முந்தச்
செய்யும் உண்மையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்

வானிலே வில்லொன்று
வண்ணமாய்த் தோன்றுதம்மா!
காணவே கண்களில்
குளிர்ச்சியும் கூட்டுதம்மா!

கார்மேகத் தூறலின்
கண்கட்டி வித்தையம்மா!
மாயங்கள் காட்டுது
வந்தே பாரம்மா!





ஏழு நிறங்கள் இணைந்து
கோலங்கள் போடுதம்மா!
பார்த்திடும் போதிலே,
உள்ளமும் துள்ளுதம்மா!

தோரணமாய்த் தொங்கும் உனைத்,
தொட்டிடுவோம் நாமே!
கார்முகிலில் கரைந்திடாமல்
பிடித்திடுவோம் தானே!

விளையாடக் கொஞ்சம்
நீயும் வந்திடு வாயே!
வீசும் தென்றலிடம்
விடை அனுப்பிடுவாயே!

கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வான்துளி



வான்துளி வந்ததும்
வறுமை ஒழிந்திடும்,
தேன்பெறும்
வண்டினமுந் திரியும்!

மேகங்கள் சேர்ந்திட
மின்னலும் பூத்திடும்,
தாகங்கள் தீர்த்திடும்
தண்ணீரே!

விண்துளி மண்ணிலே
விழுந்ததும் விளைந்திடத்,
தண்மையிற் தருக்களும்
தளிர்த்திடுமே!

கார்மேகங் கண்டதும்
கானம யிலாடிடும்,
நீர்த்துளிகள் நிலத்தினில்
நிறைந்திடுமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# செல்லச் சிட்டுக்கள்



செல்லச் சிட்டுக் குருவியே!
சிங்காரப் பட்டுச் சிறகையே!
மெல்ல மெல்ல விரிக்கிறாயே!
மகிழ்ச்சி அள்ளித் தருகிறாயே!

சின்ன வண்ணக் குருவியே!
தின்ன நெல்லும் இருக்குது
உண்ணக் கனியும் இருக்குது!
தூங்கக் கூடுமிங்கு இருக்குது!



சின்ன வண்ணக் குருவியே!
தூர தேசம் சென்றாயா!
நயகராவில் நனைந்து வந்தாயா!
இமயமலையைக் கண்டு வந்தாயா!

வந்திடுவாய் வண்ணக் குருவியே!
நம்ம வாசலிலே ஒன்றாய்க் கூடியே!
பாடியாடி விளை யாடிடு வோமே!



கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர் கல்வி பெற்றிடுவோம்



வண்ணங்கள் கண்டிடும்
சின்னஞ் சிறுமலர்நாம்!
எண்ணங்கள் சிறந்திட
அன்னங்கள் ஆகிடுவோம்!

பொன்னான பூமியில்
புதுமைகள் செய்வோம்!
எந்நாளும் இணைந்தே
இனிமையும் காண்போம்!

விஞ்ஞான மிளிரும்
விந்தைகள் புரிவோம்!
அஞ்சாமல் அரும்பணி
ஆற்றி டுவோம்!

நமதான வருங்காலம்
வளமாக உழைப்போம்!
களம்பல காணவே
நாள்தோறும் படிப்போம்!

பெற்றோரைப் பேணிடுவோம்!
பெரியோரை மதித்திடுவோம்!
பார்போற்ற வாழ்ந்திட
சீர்கல்வி பெற்றிடுவோம்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டி



நாம் வளர்க்கும் நாய்க்குட்டி
நம்மைச் சுற்றும் வாலையாட்டி!
நன்றியுள்ள அழகுக் குட்டி.
வீட்டைக் காக்கும் வீரம் காட்டி!
(நாம் வளர்க்கும்...)

பந்தடிக்க ஓடிவரும் செல்லக்குட்டி!
பாலரோடு பாய்ந்தோடும் காதையாட்டி!
பாம்பைக் கண்டால் விரட்டிடுமே வீரக்குட்டி!
கள்வரையும் கண்டுவிடும் மோப்பமேற்றி!
(நாம் வளர்க்கும்...)

வள்வள் என்றே குரைத்துக் காட்டும்!
வாலை வாலை ஆட்டிக் குதிக்கும்!
சோறும் கறியும் சுவைத்து உண்ணும்!
எலும்புத்துண்டை விரும்பிக் கடிக்குமே!
(நாம் வளர்க்கும்...)





கின்னியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்கள் தாக்குது!




தொற்றா நோய்கள்
உடலினை உருக்குது!
புற்று நோயும்
புதுமையாய்த் தாக்குது!


உடனடி உணவுகள்
தவிர்த்திடு வோமே!
புதிய உணவினைப்
புசித்திடு வோமே!

மேனி அழகைப் பேணவே,
கீரை வகைகள் உண்ணுவோம்!

பச்சை மரக்கறி
நாளு முண்டிடவே,
மிச்ச நோய்களும்
பறந்திடும் உண்மையிலே!!

நித்தம் தொடுதிரை நேசத்திலே,
தொற்றா நோய்களும்
முத்தம் தந்திடுமே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல்



அலையடிக்கும் ஆழியிலே கப்பலினைப் பாரம்மா!
துறைமுகத்தில் தங்கி நிற்கும் வீடம்மா!
கடலில் திரியும் போதிலது கவிழுமா!
சின்னமாமா நாங்கள் பார்க்கப் போவோமா!
(அலையடிக்கும்)

எண்ணெய்க்கப்பல் எரிபொருளை ஏற்றி வருகுது!
சரக்குக் கப்பல் சாமான்களைக் கொண்டு தருகுது!
பயணக் கப்பல் ஆட்களையே ஏற்றிச் செல்லுது!
ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் கப்பலுந்தான் உதவுது!
(அலையடிக்கும்)



கப்பலிலே விளையாட ஆசையுந்தான் வருகுது!
வீடுபோல வாழ்வதற்கு இடமுமங்கே இருக்குது!
மீன்பிடிக்கும் கப்பலதன் நங்கூரத்தில் நிற்கிது!
மீனுணவும் நமக்குக் கொண்டு தருகுது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் பறக்குது!




பட்டம் பறக்குது!
பட்டம் பறக்குது!
ஆடியாடிப் பறக்குது,
அங்கே பாருங்க

பாம்புப் பட்டம்
பருந்துப் பட்டம்
காற்றில் ஆடியாடி,
அழகாய்ப் பறக்குது!

எட்டு மூலைப் பட்டமெனக்கு
மாமா கட்டித் தாருங்க!
ஒட்டும் பசையும் ஈர்க்கும்
அம்மா கொண்டு வாருங்க!

வண்ணத் தாளை வெட்டி,
அண்ணா வாலை ஒட்டுங்க!
விண்ணில் பட்டம் ஏற்ற
நூலை எனக்குத் தாருங்க!

பட்டம் போல நாமுயர
பல நூல்கள் படித்திடு வோமே!
பாரில் நாமும் சாதனைகள்,
படைத்திடுவோமே!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வாழ்க்கையின் மகிழ்ச்சி





பள்ளி செல்லும் பாலரே!
துள்ளியோடி வாருங்கோ!
புல்லைத் தின்னும் பசுக்களும்
உள்ள திங்க பாருங்கோ!



தாத்தா பாலைக் கறக்கிறார்!
பாட்டி அரிசி புடைக்கிறார்!
பாற்சோறு ஆக்க வங்கே,
அம்மா அடுப்பு எரிக்கிறார்!

குளத்தில் பிடித்த மீன்களை
அப்பா கொண்டு வருகிறார்!
அக்கா கீரை பறிக்கிறார்!
கழுவிச் சுத்தம் செய்கிறார்!



பாசம் பொங்க உறவுகள்
ஆசையோட பழகுது!
வீசும் காற்று வாசமாய்
நாசி வந்து சேருது!



கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயில்கள் பாட்டுப் பாடுது!
குளத்தில் மீன்கள் துள்ளுது!
கமலம் பூத்துச் சிரிக்குது!
நெல்லும் விளைந்து மணக்குது!



பருந்து ஒன்று வானிலே,
சுற்றிச் சுற்றிப் பறக்குது!
குப்பை மேட்டில் குஞ்சுடன்
கண்ட கோழி பதறுது!




அழகுக் கோழிக் குஞ்சுகள்,
அங்குமிங்கும் சிதறுது!
அம்மா வந்து பாருங்கோ!
கோழிக்குஞ்சை அடையுங்கோ!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாட்டு வண்டி




காளை மாடு இரண்டு பூட்டி!
கடகட வென ஓடும் வண்டி!
சம்பா நெல்லுப் பாரம் ஏற்றி!
சகதிக் குள்ளும் போகும் வண்டி!

எரிசக்தித் தேவை இல்லாத் தேரு!
பாரத்தோடு கடந்திடுமே ஆறு!
சலங்கைச் சத்தக் கலக்கலும் பாரு!
கழனி செல்லச் சிறந்ததெனக் கூறு!

இராகமாக மாமா பாட்டுப் பாட!
வேகமாக எங்கள் வண்டி ஓடுமே!
காடுமேடு கடந்து பறந்து போகுமே!
மாடு தின்னப் புல்லைக் கொடுப்போமே!





கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கணாங் குருவி!



தொட்டில் போலத்
தொங்கும் கூட்டைப் பாரம்மா!
அதைக் கட்டுவது
தூக்கணாங்குருவி தானம்மா!

சின்னஞ்சிறு குருவியது
சிங்காரமாய்க் கட்டுது!
மின்மினியைக் கூட்டினிலே
விளக்கேற்ற வைக்குது!

நீளமான நாரினையே
செருகிச் செதுக்குது!
தோரணமாய்த் தொங்கும்
மெத்தை வீடு தானது!

அலகினாலே கோர்த்து
நுட்பமாகப் பின்னுது!
அழகுக் கூடு ஆண்குருவி,
கட்டி முடிக்குது!

காற்றிலாடும் கூடு,
நேர்த்தியாக இருக்குது!
கூட்டிலி ருக்கும் குஞ்சு,
தலையை நீட்டிப் பார்க்குது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குள்ள நரி



காட்டுக்குள்ளே குள்ளநரி
வாட்டத்தோடு நின்றது!
தோட்டத்திலே காய்கனிகள்
தேடி ஓடி வந்தது!

தோட்டக்காரன் தடியெடுத்துத்
துரத்தி அடிக்கும் போதிலே,
நாட்டுக்குள்ளே ஓடிவந்து
நரியும் மாட்டிக் கொண்டது!



கூட்டமாகக் கண்ட சிறுவர்
கல்லெடுத்து எறிந்தனர்!
ஓட்டம் பிடித்த குள்ளநரி
ஒளிக்க எண்ணம் எடுத்தது!

சலவை செய்யும் நீலநீரில்
குதித்து மறைந்து கொண்டது
நிறமாறி வெளியில் வந்து
காடு திரும்பிச் சென்றது!



கின்னியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டில் விலங்குக் கூட்டம்
போட்டு நானே ராஜா என்றது!
நம்பிக் கொண்ட அவையும்
நரியை வணங்கி நின்றன!



பின்னொருநாள் பெய்த மழையில்
நரியும் நனைந்து நின்றது!
சாயம் வெளுத்த நரியைக் கண்ட
சிங்கம் குதறிக் கொன்றது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் நடுவோம்



வகை வகையாய் மரஞ்செடிகள்
வளர்த்திடு வோமே!
தினம் தினமும் நீரூற்றி
மகிழ்ந்திடு வோமே!

பச்சைமரம் தரும் காற்று
சுத்த மானதே!
மழையும் நிழலும் தந்திடும்,
மண்ணும் குளிரவே!

மணம் வீசும் மலர் தருமே!
இனிமையான கனியும்
கொட்டுமே!
தினம் தினமும் நீரூற்றி
மரங்கள் வளர்ப்போமே!

மூலிகையாம் மருந்துச் செடி
நோயைத் தீர்க்குமே!
ஆசையாக வளர்த்தாலே
வாசலுக்கு வடிவுதானே!



கின்னியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க பொம்மை



அழகான பொம்மையொன்று
மாமா தந்தாரு!
தகதகவென மின்னுவதைத்
தங்கை நீயும் பாரு!
(அழகான பொம்மை..,)

தலையை ஆட்டியாட்டி
சிரிக்குதந்த பொம்மையே!
காலைக் கையை நீட்டி
அசைக்குதந்த பொம்மையே!
(அழகான பொம்மை...)



கண்சிமிட்டிக் கைநொடித்து
ஆடுவதைப் பாருங்கள்!
வாழ்த்துக்கூறி வடிவாகப்
பாடுவதைக் கேளுங்கள்!
(அழகான பொம்மை..)

பூசிவைத்த தங்க முலாம்
புதுமையாக இருக்குதே
சாவி கொடுக்கத் தங்கை போல
கலகலவெனச் சிரிக்குதே!
(அழகான பொமமம்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழைச் சுவைத்திடுவோமே!

செந்தமிழைச் செந்தேனாய்ச் சுவைத்திடு வோமே!
சிந்துகின்ற பாடல்களை நயந்திடு வோமே!

செழுமையான சொற்களினை மொழிந்திடு வோமே!
சுந்தரமாய்ச் சொன்னயமும் உணர்ந்திடு வோமே!

தரணியிலே தண்டமிழை வளர்த்திடு வோமே!
தாய்மொழியை உயிரெனவே மதித்திடுவோமே!

இன்தமிழிசை இன்பமாக இருக்குது!
இசைத்திடவே வண்ணங்களும் சிறக்குது!

அழகுத்தமிழ் அகிலத்தினை மயக்குது!
இலக்கியங்கள் இன்றும் வைரங்களாய் மின்னுது!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயில்லாமல் வாழுவோம்



தொற்று நோயைத் துரத்திட,
நித்தம் சுத்தம் பேணுவோம்!
அச்சம் கொண்டு அழுக்கினை
மிச்சம் இன்றி நீக்குவோம்!



வீட்டில் சேரும் குப்பையை,
அக்கம் பக்கம் கொட்டாமல்,
கூட்டிச் சேர்த்துக் குவித்துமே,
கூட்டுப் பசளை ஆக்குவோம்!

சின்னச் சின்னக் கரங்களை,
தண்ணீர் கொண்டு கழுவுவோம்!
வண்ண வண்ணப் பூமரம்,
வாசல் நிறைய நாட்டுவோம்!

புத்தம் புதிய பழங்களும்,
பச்சை நிறத்துக் கீரையும்,
சத்து நிறைந்த உணவென,
சித்தம் மகிழ்ந்தே உண்ணுவோம்!

வெந்த நீரை விரும்புவோம்!
பசுவின் பாலைப் பருகுவோம்!
பள்ளித் தோழர் யாவரும்,
பாசங்கொண்டு பழகுவோம்!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவன் வரவு



காலைக் கதிர் கடல்
குளித்து எழும்புது!
சோலைக் கிளியும்
மெல்லச் சிறகை விரிக்குது!

காகங்களும் கதிரவனைக்
கா காவென அழைக்குது!
மேகங்களும் வானில்
மெல்ல மெல்ல அசையுது!

வாசலிலே மலர்கள் வாசம்
வீசி மலருது!
ஆசையோடு வண்டுகளும்
பூவைத் தேடித் திரியுது!

பாசத்தோடு அம்மா பாலை
யாற்றித் தருகிறார்!
தோசைகளை அக்கா சுட்டு,
மேசை மேலே வைக்கிறார்!

புல்லில் தூங்கும் பனித்துளி
மெல்ல மெல்லக் கரையுது!
பள்ளி செல்லும் பிள்ளை
வெள்ளையிலே விரையுது!





கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தமிழ் வளர்க்கும்
கிண்ணியா சபீனா..!
துணிச்சலும் துல்லியமான பார்வையும்
என்றும் மனஞ்சலிக்கா
மகத்துவம்நிறை ஆளுமையும்
தன்னகத்தே கொண்ட கவிதாயினி,
எங்கள் கிண்ணியா சபீனா!
வண்ணக் கனவுகளின் வடிவழகை
கன்னல் தமிழில் தந்தாள்.
எண்ணி வியக்கும் யாப்பிலக்கணத்தை
தன் கவிதைகளில் அள்ளித் தெளித்து
அகமகிழ்வதிலோர் ஆனந்தம் இவளுக்கு.
சின்னஞ் சிறார்களுக்காய்
செதுக்கியெடுத்த இவளின்
"செல்லச் சிட்டுக்கள்"
மெல்லச் சிறகடித்து சொல்லும்
பாடல்களோ சுவை
அமுதக் கலசங்களாய்..!
வானவில்லின் வர்ணஜால வசீகரமும்
தேன்குடித்து திசைபலவும்
சிறகடிக்கும் பட்டாம்பூச்சிகளின் படபடப்பும்
சிறுமுயலும் பெருநரியும்
குதித்தோடி குறும்புசெய்யும்
வெள்ளை முயலும்
பாய்ந்தோடும் புள்ளிமானும்
இவளது பாடல்களில் ஓடோடிவந்து
ஆசையாசையாய் முகங்காட்டி
சின்னஞ் சிறுசுகளை தம்மோடு
அணைத்து விளையாடும் விந்தைகளும்
என்னவோர் இனிமையாய்
இதயங்களை வருடும்
தென்றலின் சுகங்களாய்.
மழலைகளின் உள்ளங்களில்
மகிழ்வையும் மாண்பையும்
கல்வியையும் விளையும்
பயிர்களுக்கான பண்பட்ட
விளைச்சல் நிலமாகவும்
இவள் தந்த இனிய பாடல் நூலிது.
இதை இலக்கிய உலகிற்கு
படைத்தளித்த கவிதாயினி
"கிண்ணியா சபீனா" வாழ்க.
இன்னுமின்னும்
வண்ணக் கவிபடைத்து
வாழ்க...! வாழ்க..!! என வாழ்த்தும்

- ஷெல்லி தாசன்



வெளியீடு
LACSDO SRILANKA
ISBN: 978-624-94949-6-1
Rs.600/-
VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org